# நடப்பு நிகழ்வுகள்- ஜூன் 28 - 2017

- பெண் சிசுக்கொலையை தடுக்க உத்திரபிரதேச அரசால் "முக்பீர் யோஜனா" (Mukbir Yojana) எனும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- தென்னிந்தியாவில் முதல் முறையாக தமிழகத்தில் குழந்தைகளை பாலியல் கொடுமையில் இருந்து பாதுகாக்கும் "உதயம் வழிப்புணர்வு திட்டம்" சேலத்தில் தொடங்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தின் மூலம் பள்ளி செல்லும் அனைத்து குழந்தைகளுக்கும் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கும் குழந்தைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும்.

- கூகுள் நிறுவன தேடு பொறியியல் அதன் சொந்த ஆன்லைன் சேவை, கூகுள் சாப்பிங் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டதால் ஐரோப்பிய யூனியன் ரூ 17,000 கோடி அபராதம் விதித்துள்ளது.

- இந்திய பிரதமர் மோடி மற்றும் நெதர்லாந்து பிரதமர் மார்க் ரட்டே ஆகியோரின் சந்திப்பின் போது இரு நாடுகளுக்கிடையே சமூக பாதுகாப்பு, நீர் மற்றும் கலாச்சார ஒத்துழைப்பு என 3 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுதாகியுள்ளது.

- சமூக வலைதளங்களில் பேஸ்புக்கில் இந்திய பிரதமர் மோடி முதலிடத்தில் உள்ளார் 4.22 கோடி பேர் பின்தொடர்கின்றனர். அடுத்தபடியாக இந்திய கிரிக்கெட் அணி கேப்டன் விராட்கோலி இரண்டாவது இடத்தில் 3.5 கோடி பேர் பின்தொடர்கின்றனர். அடுத்தபடியாக நடிகர் சல்மான்கான், பிரியங்கா சோப்ரா, தீபிகா படுகோன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

- கதைசொல்லி இதழின் பொறுப்பாசிரியரும் எழுத்தாளருமான கழனியூரன் 27.06.17 அன்று காலமானார். இவர் நெல்லை வட்டார கதைகளை தொகுத்து தாய் வேர், கதை சொல்லியின் கதை, நெல்லை நாடோடிக் கதைகள், மண் மணக்கும் மனுஷங்க, நாட்டுப்புற நீதிக் கதைகள், பன்னாட்டு சிறுவர் நாடோடிக் கதைகள் உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

- குஜராத் மாநிலம் காந்தி நகரில் ஜுன் 30 முதல் ஜுலை 2 வரை 3 நாட்கள் நடக்கவுள்ள “டெக்ஸ்டைல்ஸ் இந்தியா 2017” கண்காட்சியை பிரதமர் மோடி திறந்துவைக்கிறார்.

- 7வது சீனியர் தேசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் ரயில்வே விளையாட்டு மேம்பாட்டு வாரிய (RSPB) அணி மூன்றாவது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றது.

- East Bengal கால்பந்து கழகம் நிறுவப்பட்ட நாளான ஆகஸ்ட் 1 அன்று தங்கள் மிக உயரிய விருதான “Bharat Gaurav”-ஐ இந்திய ஹாக்கி அணியின் முன்னால் அணித்தலைவரான தன்ராஜ்பிள்ளைக்கு வழங்கவுள்ளது.

- 2017 ஆம் ஆண்டிற்கான சமூக முன்னேற்ற குறியீட்டில் (Social Progress Index), 128 நாடுகளில் இந்தியா 93 வது இடத்தில் உள்ளது.

- 2017 ஜுன் 27 அன்று “Small business – big impact” எனும் மையக்கருத்துடன் சர்வதேச வர்த்தக மையம் (International Trade Centre), முதல் சர்வதேச நாளை MSME கொண்டாடியது. இந்நாளின் நோக்கம் பொருளாதார வளர்ச்சி மற்றும் சர்வதேச வளர்ச்சிக்கு MSME களின் முக்கியத்துவம் பற்றிய பொதுவான வழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

- மாநில அளவில் எதிர்க்கப்படும் லோதா குழுவில் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதில் உள்ள சர்ச்சைக்குரிய சிக்கல்களை ஆய்வு செய்ய 7 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழுவை Board of Control for Cricket in India (BCCI) அமைத்துள்ளது.

- பிரபல செல்போன் நிறுவனமான விவோ ஐபிஎல் போட்டியின் விளம்பரதூதராக நீடிக்கவுள்ளதாக பிசிசிஐ அறிவித்துள்ளது அடுத்த 5 (2018 – 2022) வருடங்களுக்கு விவோ நிறுவனம் பிசிசிஐ க்கு ரூ 2,199 கோடி வழங்கவுள்ளது.

OXFORD IAS ACADEMY